**செ.வெ.எண்:21/ஜீன் /  2019** **நாள்: 07.06.2019**

**திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் பழங்குடியினர் நலத்துறையின் கட்டுபாட்டில் இயங்கும் விடுதிகளில் தங்கி பயில்வதற்கு பழங்குடியினர், ஆதிதிராவிடர், பிற்படுத்தப்பட்டோர் ,மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் இதர இனத்தைச் சார்ந்த மாணவ மாணவிகளிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றது.**

**மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.சிவராசு,இ.ஆ.ப. அவர்கள் தகவல்.**

*****

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் பழங்குடியினர் நலத்துறையின் கட்டுபாட்டின் கீழ் இயங்கும் பள்ளி, மாணவ, மாணவியர் விடுதிகளில் 2019-20 ஆம் கல்வியாண்டிற்கான மாணவர் சேர்க்கை நடைபெற உள்ளது. இவ்விடுதிகளில் காலியாக உள்ள இடங்களில் சேர விரும்பும் பழங்குடியினர், ஆதிதிராவிடர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் இதர இனத்தைச் சார்ந்த மாணவ மாணவிகள் சம்மந்தப்பட்ட வடுதிக்காப்பாளர், காப்பாளியினைஅணுகி இலவசமாக விண்ணப்பங்களை பெற்றுக் கொள்ளலாம். விடுதியில் சேர்ந்து பயிலும் அனைத்து மாணவ, மாணவியருக்கும் உணவும் உறைவிடமும் இலவசமாக அளிக்கப்படும். விடுதியில் சேர விரும்பும் மாணவ, மாணவிகளின் பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ.2.50 இலட்சத்துக்கு மிகாமல் இருக்கவேண்டும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்துடன் மாணவரின் EMIS எண், ஆதார் அட்டை நகல், வங்கி புததகத்தின் நகல், மாணவ, மாணவியரின் புகைப்படம், பெற்றோரின் வருமானச்சான்றிதழ், இருப்பிடச்சான்று ,சாதிசச்சான்றிதழ் மற்றும் இதர ஆவணங்களுடன் 20.06.2019க்குள் சம்மந்தப்பட்ட விடுதிக்காப்பாளிடம் சமர்பிக்கப்படவேண்டும்.உரியக் காலக்கெடுவுக்குள் வரப்பெறாத விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை தமிழர்களின் குழந்தைகள் தங்கிப்பயில ஒவ்வொரு விடுதியிலும் கூடுதலாக 5 இடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதால் விடுதிகளில் சேர்ந்து பயில விரும்பும் இலங்கைத்தமிழர்களின் குழந்தைகளும் மேற்குறிப்பிட்ட தேதிக்குள் தங்களது விண்ணப்பங்களை சமர்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**செய்தி வெளியீடு:**

**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,**
**திருச்சிராப்பள்ளி.**